**12.10.2022**

**OS.No. 348/2021 PW : 1, திரு. லதா**

**4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**

முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு நான் தான் தகவல் சொன்னேன். பாகப்பிரிவினை பரிகாரம் கோரியிருக்கிறேன். 1/5 பாகம் கேட்டிருக்கிறேன். 1 முதல் 3 பிரதிவாதி மற்றும் கவிதா ஆகியோர்கள் என் உடன்பிறந்தவர்கள். தாவா சொத்துக்கள் திருவள்ளூர், திருவூர், திருவூர்குப்பம், புட்லூர் மற்றும் ஆந்திராவிலுள்ள கோவனூர், பாவனவாரி கண்டிகை ஆகிய கிராமங்களில் இருக்கிறது. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் ஆகும். என் தாத்தா, பாட்டி ஆகியோர்களின் பூர்வீக சொத்துக்கள் ஆகும். என் பாட்டி பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். பாட்டி பெயரில் உள்ள பத்திரங்களை கொடுத்திருக்கிறேன். என் பாட்டி யாரிடமிருந்து வாங்கினார் என்று கேட்டால் அது பூர்வீக சொத்துக்கள் ஆகும். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. தாவா இடங்கள் எங்கேஇருக்கிறது என்று எனக்கு தெரியும். திருவூரில் 15 ஏக்கர், புட்லூரில் 8 ஏக்கர், திருவூரில் ஒரு ரைஸ்மில்லும், திருவள்ளூரில் ஜெயா நகரில் ஒரு வீடும், கோவனூர் மற்றும் பாவனார் கண்டிகையில் 75 முதல் 80 ஏக்கர் வரை இருக்கிறது. என் தந்தை பெயரிலும் சொத்துக்கள் இருந்தது அது பூர்வீக சொத்தில் உள்ள வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது. பத்திரம் கொடுத்திருக்கிறேனா என்று கேட்டால் கொடுத்திருக்கிறேன். எனக்கு 1996ல் திருமணம் நடந்தது. என் பெற்றோர்கள் தான் திருமணம் செய்து வைத்தார்கள்.

கன்னிகாதான திருமணம் செய்து வைத்தாரா என்று கேட்டால் என் பெற்றோர் என் திருமணத்தின் போது 10 பவுன் நகை மட்டும் போட்டார். வேறு எதுவும் கொடுக்கவில்லை. சொத்துக்களில் பின்னர் பங்கு கொடுப்பதாக சொன்னார். 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார் என்று படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள ஆவணங்களை நான் வாங்கி பார்க்கவில்லை. என் தந்தை பெயரில் உள்ள கிரையம் ஆவணங்களையும் நான் வாங்கி பார்க்கவில்லை. ஜெயசிம்மன் பெயரில் உள்ள ஆவணங்களையும் நான் வாங்கி பார்க்கவில்லை. பட்டாக்களை தவிர வேறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 152/2ஏ1ஏ-ல் உள்ள சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியபட்டது இல்லை என்றால் சரியல்ல. என் தந்தையின் உடன்பிறந்த சகோதரியான லட்சுமிதேவியம்மாள் உயிருடன் இருக்கிறார். அவரின் கணவரின் பெயர் கோவிந்தநாயுடு. லட்சுமிதேவியம்மாளும், என்னுடைய தந்தையின் தாயாரான அங்கம்மாளும் 1956ல் சில சொத்துக்களை கிரையம் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் 1957ல் சில சொத்துக்களை வாங்கினார்கள். அனைத்தும் கூட்டுகுடும்பமாக இருந்தபோது வாங்கப்பட்டது. அங்கம்மாள் என்னுடைய தந்தைக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்திருக்கிறார் என்று சொன்னால் என் பாட்டி அவ்விதம் எழுதி வைத்திருக்க மாட்டார். அந்த சொத்து ஏ அட்டவனை சொத்தில் 1வது அயிட்டத்தில்

9வது இனசொத்து என்றும் (சர்வே எண் 6/2ஏ1) அது என் தந்தையின் தனி சொத்து என்றால் சரியல்ல. அந்த சொத்திற்கு இன்றுவரை என் தந்தை பெயரிலும் லட்சுமிதேவி பெயரிலும் வாசாஆ2 படி பட்டா இருக்கிறது. திருவூர் குப்பத்தில் உள்ள ரைஸ்மில் என் தந்தையால் 1965ல் சுயமாக கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தந்தை பெயரில் அனைவரும் கஷ்டப்பட்டு வாங்கப்பட்ட சொத்தாகும். அந்த சொத்துக்கள் ஏ அட்டவனை சொத்தில் 1வது அயிட்டத்தில் 3 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் ஆகும். அந்த சொத்துக்களை பற்றிய ஆவணங்களை 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியிருந்தும் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் அந்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. புட்லூர் மற்றும் திருவூர் குப்பதில் உள்ள சொத்துக்கள் என் தந்தையின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் அது பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 9/1ல் உள்ள சொத்து 1ம் பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்து என்றும் அது கூட்டுகுடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. சர்வேஎண் 364/1ல் உள்ள சொத்தை என் தந்தை கிரையம் வாங்கினார். அதை பூர்வீக சொத்தில் உள்ள வருமானத்தில் இருந்து வாங்கினார். சர்வே எண் 364/2ஏ2ல் உள்ள சொத்து கோவிந்தசாமி நாயுடுவின் சொத்து என்றும் அது எங்கள் குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்தை கோவிந்தசாமி நாயுடு 1979ல் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. அவர் என் அத்தையின் கணவர் ஆவார். அவரும் கூட்டுகுடும்பத்தில் என்

தந்தையுடன் இருந்தார். அந்த சொத்துக்கு கோவிந்தசாமி பெயரில் பட்டா இருக்கிறது. சர்வேஎண் 364/2பி2ல் உள்ள சொத்தும் கோவிந்தசாமி நாயுடுவால் 1979ல் சுயமாக கிரையம் வாங்கப்பட்டது என்றும் அதையும் தேவையில்லாமல் இவ்வழக்கில் சேர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல. சர்வே எண் 367ல் கோவிந்தசாமி நாயுடுவிற்கு பாதி பங்கு இருக்கிறது என்றும் அவரது பங்கையும் இவ்வழக்கில் தேவையில்லாமல் சேர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல. சர்வேஎண் 368 கோவிந்தசாமி நாயுடு சொத்து என்றும் அதையும் தேவையில்லாமல் சேர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல. சர்வே எண்கள் 534/1பி மற்றும் 534/1டி பிளாட் எண் 23 என் தந்தையின் குடும்ப சொத்து இல்லை என்றும் கோவிந்தசாமி நாயுடு மகன் பூபதி சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியும் என்றும் அதுசம்பந்தப்பட்ட பத்திரங்களை பற்றி எனக்கு தெரியும் என்றும் அந்த பத்திரங்களை தாக்கல் செய்தால் இவ்வழக்கு நிற்காது என்பதால் பட்டாக்களை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு பூர்வீக சொத்தே இல்லை என்றும் அதைத்து சொத்தும் அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 13.04.2009 தேதியிட்ட எதிர்வழக்குரையில் சொல்லப்பட்ட உயிலை நான் வாங்கி பார்க்கவில்லை. என் தந்தை உயில் எதையும் எழுதி வைக்கவில்லை. வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் சொத்து சம்பந்தப்பட்ட வில்லங்க சான்றிதழை நான் பார்த்தேன். அதை நான் தாக்கல்

செய்யவில்லை. 13.04.2009 தேதியிட்ட உயில் மூலம் என் தந்தை அவருடைய சுயசம்பாத்திய சொத்துக்களை ஜெயசிம்மன், பூபதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை உயில் எதையும் எழுதி வைக்கவில்லை. அந்த உயிலை நீதிமன்றம் மூலம் வரவழைக்க நடவடிக்கை கூட எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2009க்கு முன்னரே என் தந்தை சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டார். அதன்படி சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 29.06.2014ல் என் தந்தை இறந்தபின்னர் மேற்கூறிய உயில் அமலுக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. என் தந்தை இறந்தபின்னர் மேற்கூறிய மூவரும் அந்த உயிலை வெளிப்படையாக தெரிவித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.